## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
## ஊத்துக்குளி
## அசல் வழக்கு எண் 144/2020
## DW: 1

2024–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 06 ஆம் நாள், பிரதிவாதி தரப்பு (பி.சா.1) சாட்சியின் வாக்கு மூலம் 1969ம் ஆண்டு விதி 44 ன் படி திரு.பா.தரணீதர், பி.ஏ.,எல்.எல்.எம்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஊத்துக்குளி, அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| Name | துரைசாமி | Caste | |
| Father Name | கிருஷ்ணசாமி கவுண்டர் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 51 |

தேதி 06.02.2024

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதியின் தரப்பில் முதல் விசாரணை</u>**

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பழைய வீரணம்பாளையம், சீனாபுரம் அஞ்சல், க.எண். 9/141-Aல் வசிக்கும் கிருஷ்ணசாமி கவுண்டர் மகன் சுமார் 51 வயதுள்ள துரைசாமி என்னும் நான் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் அதை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். நான் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியாவேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

**<u>ஆவணங்கள்</u>**

1. 04.04.2017ம் தேதிய பதிவு செய்யப்படாத ஒப்பந்த ஆவணத்தின் அசல் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 24.05.2019ம் தேதியில் எழுதப்பட்ட விஜயகிரி வேலாயுதசுவாமி கல்வி அறக்கட்டளையின் பதிவு செய்யப்பட்ட துணைப்பத்திரம் (05/2019) சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 13.08.2020ம் தேதியில் வழங்கப்பட்ட ஸ்ரீ வெற்றி விநாயகா மெட்ரிக் பள்ளியின் உரிமம் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **பி.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 29.10.2020ம் தேதியில் வழங்கப்பட்ட ஸ்ரீ வெற்றி விநாயகா மெட்ரிக் பள்ளியின் அங்கீகாரச் சான்று மற்றும் இணை இயக்குநர், தனியார் பள்ளி இயக்குநரகம், சென்னை அவர்களால் வழங்கப்பட்ட புதுப்பீடு சான்று நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **பி.சா.ஆ.4** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.

5. 14.06.2016ம் தேதியில் ஸ்ரீ வெற்றி விநாயகா மெட்ரிக் பள்ளிக்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் சேலம் மண்டலம் அவர்களால் அளிக்கப்பட்ட கட்டிட அனுமதி கடிதம் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **பி.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 2020 – 2021, 2021–2022, 2022–2023ம் ஆண்டுகளுக்கான விஜயகிரி வேலாயுதசுவாமி கல்வி அறக்கட்டளையின் வருமானவரி ஒப்புகைச் சீட்டு உண்மை நகல் 3 எண்ணிக்கை **பி.சா.ஆ.6** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

வாதியின் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B
DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.02.06 16:31:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.